11.09.2017

தினமலர்

**சம்பா சாகுபடிக்கு விதை நெல் , உரம் தட்டுப்பாடின்றி வழங்க அரசு உத்தரவு**

சம்பா சாகுபடிக்கு தேவையான விதை நெல் , உரம் போன்றவற்றை , போதிய அளவுக்கு இருப்பு வைக்க , வேளாண் துறையினர் ஏற்பாடு செய்துஉள்ளனர்தமிழகத்தில்., ஆண்டு தோறும் , அக்டோபர் முதல் டிசம்பர் வரை சம்பா பருவ நெல் சாகுபடி நடப்பது வழக்கம் இதன் அறுவடை., ஜனவரியில், பொங்கல் பண்டிகை நேரத்தில் நடக்கும் .2016ல், வடகிழக்கு பருவ மழை பொய்த்ததால், வறட்சியால் சம்பா பயிர்கள் கருகின அதனால்., பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, இடுபொருட்களுக்கான நிவாரணத்தை அரசு வழங்கியது பயிர் . இந்தாண்டு. காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இழப்பீடும் தரப்பட்டது, சம்பா பருவ நெல் சாகுபடி காலம் விரைவில் துவங்க உள்ளது தென்மேற்கு பருவ மழை இயல்பை. விட அதிகம் பெய்து வருவதால், விவசாயிகள் நம்பிக்கையோடு, சாகுபடிக்கு நிலத்தை பண்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர் எனவே., மாநிலம் முழுவதும் , 30 லட்சம் ஏக்கருக்கு மேல் சம்பா சாகுபடி நடக்கும் வகையிலான ஏற்பாடுகளை , வேளாண் துறையினரும் துவக்கி உள்ளனர் இது குறித்து., வேளாண்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் உரம்:, விதை நெல் போன்றவை , தொடக்க வேளாண்கூட்டுறவு மையங்கள் மற்றும் தனியார் மூலம் விற்கப்படுகின்றனஇதை., விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி வழங்கவும் , அவ்வப்போது, இருப்பு விபரங்களை தரும்படியும் , மாவட்ட வேளாண் துணை இயக்குனர்களுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது அதனால்., தட்டுப்பாடு உருவாகி , விதை நெல்மற்றும் உரத்தின் விலை உயர வாய்ப்பில்லை . இவ்வாறு அவர் கூறினார்.

- நமது நிருபர் –

# தமிழகத்தில் மழை தொடரும்: வானிலை ஆய்வு மையம்



**சென்னை:** வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் சில இடங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்குப் பருவமழை தற்போது தென் கர்நாடகத்தில் தீவிரமடைந்துள்ளது. தமிழகத்தைப் பொருத்தவரை வெப்பச்சலனம் மற்றும் வளிமண்டலத்தின் மேலடுக்கில் காற்றின் சுழற்சியால் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த மழை தொடரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறுகையில், தென் தமிழகம் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளில் வளிமண்டலத்தின் மேலடுக்கில் நீடிக்கும் காற்றின் சுழற்சி, மகாராஷ்டிரம் முதல் கர்நாடகம் வரை நிலவும் காற்றழுத்தத் தாழ்வு நிலை ஆகிய காரணங்களால், தமிழகத்தின் சில இடங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் மழை அல்லது இடியுடன்கூடிய மழை பெய்யும். சென்னையில் பொதுவாக வானம் மேகமூட்டமாக இருக்கும். சில இடங்களில் மாலை அல்லது இரவில் மழை பெய்யக்கூடும் என்றார்.

தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் வேலூர் மாவட்டம் ஆலங்காயத்தில் 70 மி.மீ. பதிவானது. வேலூர் மாவட்டம் திருப்பத்தூர், பாம்பன், கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை, தளி,

வேலூரில் தலா 40, குடியாத்தம், ஆம்பூர், ஓசூர், பாளையங்கோட்டை, ராதாபுரம், கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் தலா 30 மி.மீ. மழை பதிவானது.

## விவசாயிகளை விட்டு விலகும் வேளாண் அலுவலர்கள்!
## கேள்விக்குறியாகும் உணவு உற்பத்தி



விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்க வேண்டிய வேளாண் அலுவலர்கள், அந்த பணியிலிருந்து மாற்றுப் பாதையில் பயணிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதால் தமிழகத்தின் உணவு உற்பத்தி கேள்விக்குறியாகியுள்ளது. வேளாண் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கி , அதன் மூலம் உற்பத்தியை பெருக்கி, உணவு தேவையை பூர்த்தி செய்ய வேண்டியதே வேளாண்மைத் துறை அமைக்கப்பட்டதன் நோக்கம். இந்தியாவில் ஆண்டுதோறும் 7 லட்சம் ஏக்கர் சாகுபடி நிலங்கள், விவசாயம் அல்லாத பயன்பாட்டிற்காக (மனைகள் , தொழில்சாலைகள், சாலை விரிவாக்கம் உள்ளிட்ட பணிகள்) மாற்றப்பட்டு வருவதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

இந்த சூழலில் , தமிழகத்தில் கடந்த 6 ஆண்டுகளாக வறட்சியின் காரணமாக வேளாண்மை உற்பத்தி திறன் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது. குறைந்த அளவில் கிடைக்கும் தண்ணீரை பயன்படுத்தி , அதற்கு ஏற்ப குறுகிய கால பயிர்களை சாகுபடி செய்து விவசாயிகளுக்கு வழிகாட்ட வேண்டிய தமிழக வேளாண்மைத் துறை அதன் பாதையிலிருந்து விலகிச் செல்வதாக விவசாயிகள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள கரும்பு ஆலைகள் இயங்குவதற்கு தேவையான கரும்பு உற்பத்தி செய்யப்படாததால், பல ஆலைகளில் உள்ள அலுவலர்கள் பணியிட மாற்றம்

செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் , நீடித்த நிலையான கரும்பு சாகுபடி செய்யும் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 30ஆயிரம் ஹெக்டேரில் கரும்பு சாகுபடி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கரும்பு பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம் வழங்குவதற்கு அரசு சார்பில் ரூ. 30 கோடிக்கும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து குடிநீர் இல்லாமல் மக்கள் போராடி வரும் நிலையில் , 10 மாதங்கள் தொடர்ந்து தண்ணீர் தேவைப்படும் கரும்பு சாகுபடியை மேற்கொள்ள விவசாயிகள்தயக்கம் காட்டி வருகின்றனர். ஆனால் , நிர்ணயிக்கப்பட்ட இலக்கை பூர்த்தி செய்ய வேண்டும் என வேளாண்மைத் துறை மற்றும் கரும்பு ஆலை நிர்வாகிகள் மீதான நிர்பந்தம் , விவசாயிகளையும் பாதிப்பதாக உள்ளது.

**பயிர் காப்பீட்டுத் திட்டம்...**

வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களை விவசாயிகள் காப்பீடு செய்வதற்கு , அந்தந்த பகுதியில் உள்ள பயிர் காப்பீட்டு நிறுவன அலுவலர்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அலுவலர்கள் மூலம் கடந்த காலங்களில் பணிகள் நடைபெற்று வந்தன. இந்த பணிகளில் தற்போது வேளாண்மை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இதனால் பல இடங்களில் காப்பீட்டு நிறுவன முகவர்கள் இல்லாத சூழலும் , இருக்கும் இடங்களில் ஒதுங்கிக் கொள்ளும் நிலையும் உள்ளது. காப்பீட்டு பணிகள் மீது வேளாண்மை அலுவலர்கள் முழு கவனம் செலுத்துவதால், கிராமங்களுக்கு பயணம் செய்து விவசாயிகளை சந்தித்தல் , தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல் உள்ளிட்ட பணிகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

**டெல்டா மாவட்டங்களிலிருந்து பாடம் கற்க தவறிய உயரதிகாரிகள்...**

கடந்த 2016-17 நிதி ஆண்டில், திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர் உள்ளிட்ட டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு மானியம் வழங்க குறுவை சாகுபடிக்கு ரூ. 56 கோடியும், சம்பா சாகுபடிக்கு ரூ. 80 கோடிக்கு கூடுதலாகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. உழவு, நடவு, இடுபொருள், நீர் கடத்தும் குழாய் உள்ளிட்ட அனைத்து பணிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து மானியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. மானியம் மூலம் விவசாயிகளுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதாக கூறப்பட்டது. ஆனால் , மானியத்தை நம்பி களம் இறங்கிய விவசாயிகளுக்கு வறட்சியால் கடும் பாதிப்பு ஏற்பட்டது. உள்ளூர் விவசாயிகள் மற்றும் வேளாண்மை அலுவலர்களின் கருத்தை கேட்காமல் , மானியம் வழங்கினால் எதையும் சாதிக்கலாம் என திட்டமிட்ட உயரதிகாரிகளால் , டெல்டா பகுதியின் வேளாண்மை

கேள்விக்குறியானது. அதிலிருந்தும் பாடம் கற்க தவறிய உயரதிகாரிகள் , தற்போது கரும்பு சாகுபடிக்கு 30ஆயிரம் ஹெக்டேர் இலக்கு நிர்ணயித்து களம் இறங்கியுள்ளனர். இலக்கை பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயம் வேளாண்மை மற்றும் சர்க்கரை ஆலை அலுவலர்களுக்கு இருந்தாலும் , இறுதி பாதிப்பை சந்திப்பது விவசாயிகள் தான் என்கின்றனர் விவசாய சங்க நிர்வாகிகள்.

**உணவு தானிய உற்பத்தி பாதிப்பை தடுக்க வழிகாட்டப்படுமா....**

கடந்த 2015-16ஆம் ஆண்டில் 1.26 கோடி மெட்ரிக் டன் உணவு தானியங்களை (நெல், மக்காச் சோளம் , கம்பு, சோளம், ராகி மற்றும் பயறு வகைகள்) உற்பத்தி செய்த தமிழகம், அதன் மூலம் மத்திய அரசின் கிரிஷி கர்மான் விருதினை பெற்றது. அந்த சாதனையை தொடர்ந்து தக்க வைக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

வேளாண்மைத் துறையில் மொத்தமுள்ள 10 ஆயிரம் பணியிடங்களில் 20 சதவீத இடங்கள் காலியாக உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த சூழலில் தினசரி மற்றும் வாராந்திர கூட்டத்தில் பங்கேற்க வேண்டியதாலும் , இணையதளம், கட்செவி அஞ்சல் மற்றும் தபால் மூலமாக சென்னையிலிருந்து பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டிய நிலை இருப்பதாலும் , வேளாண் அலுவலர்கள் தங்களின் இயல்பான பணியிலிருந்து விலகிச் செல்கின்றனர். இதனால் வேளாண்மை அலுவலர்களை எளிதில் சந்திக்க முடியாமலும் , அவர்களின் ஆலோசனைகளை பெற முடியாமலும் விவசாயிகள் தவிப்புக்குள்ளாகியுள்ளனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## அறுவடை நேரத்தில் பெய்த மழையால் குமரியில் 500 ஹெக்டேர் நெற்பயிர்கள் சேதம்: பேரிழப்பை சந்தித்தது கன்னிப்பூ சாகுபடி



குமரி மாவட்டத்தில் பெய்து வரும் மழையால் , சுசீந்திரம் பகுதியில் பொடிவிதைப்பு செய்த வயல்களில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்கதிர்கள் தண்ணீரில் சாய்ந்து சேதமடைந்தன. - படம்: எல்.மோகன்.

குமரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் பொடி விதைப்பு செய்த வயல்களில் அறுவடை பருவத்தில் இருந்த நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி சேதமடைந்தன. சுமார் , 500 ஹெக்டேருக்கு மேல் கன்னிப்பூ நெல்சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகளுக்கு பேரிழப்பு ஏற்பட்டுள்ளது.

குமரி மாவட்டத்தில் நடப்பாண்டு தொடக்கத்தில் இருந்தே பருவமழை கைகொடுக்காததால் விவசாயம் பெரும் பாதிப்படைந்தது. போதிய தண்ணீர் இல்லாததால் வயல் வெளிகள் வறண்டன. இதனால் , பொடி விதைப்பு நெற்பயிருடன் சேர்த்து 2,000 ஹெக்டேருக்குள் மட்டுமே மாவட்டம் முழுவதும் கன்னிப்பூ நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. குளங்களிலும் தண்ணீர் இல்லாததால் இறச்சகுளம் ,

திருப்பதிசாரம், சுசீந்திரம், பெரியகுளம் ஆகிய பகுதிகளில் பயிரிடப்பட்டநெற்பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டது.

**நெற்பயிர்கள் சேதம்**

இந்நிலையில், மாவட்டம் முழுவதும் தற்போது பெய்து வரும் கனமழையால் அணைகளில் நீர்மட்டம் ஓரளவு உயர்ந்து வருகிறது. ஆனால் , தாழ்வான பகுதிகளில் உள்ள வயல்களில் தண்ணீர் தேங்கியது. சுசீந்திரம் , இறச்சகுளம், தேரூர், பூதப்பாண்டி போன்ற பகுதிகளில் முதலில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் நன்றாக விளைந்து நெல்மணிகளுடன் அறுவடைக்கு தயாராக இருந்தன. இவற்றில் பெரும்பாலான பயிர்கள் மழை நீரில் மூழ்கி , வயல்களில் சாய்ந்தன. இதனால் , ஆயிரக்கணக்கில் செலவழித்து, கடினமாக உழைத்து பயிர் செய்த விவசாயிகள் பேரிழப்பை சந்தித்துள்ளனர்.

**பேரிழப்பு**

இதுகுறித்து இறச்சகுளம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:

இன்னும் ஒரு வாரத்தில் அறுவடை பணி மேற்கொள்ளலாம் என இருந்த நேரத்தில் , தற்போது பெய்து வரும் மழையால் நெற்கதிர்கள் மழைநீரில் மூழ்கி விட்டன. தேவையான நேரத்தில் மழை பெய்யாத நிலையில் , தற்போது பெய்து வரும் மழை அறுவடைக்கு தயாரான விவசாயிகளுக்கு பேரிழப்பை ஏறபடுத்தியுள்ளது. அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த 500 ஹெக்டேருக்கும் மேற்பட்ட நெற்பயிர்கள் மழை மற்றும் காற்றால் வயல்களில் சாய்ந்து கிடக்கின்றன.

குறிப்பாக பொடிவிதைப்பு செய்த நெற்பயிர்கள் நெருக்கமாக இருப்பதால் தரையோடு தரையாக சாய்ந்து மஞ்சள் நிறத்துடன் கிடக்கிறது. இதனால் , இவற்றை அறுவடை செய்வதில் சிக்கல் உள்ளது.

இயந்திரம் மூலம் அறுவடை செய்தால் நெற்பயிர்கள் வீணாகிவிடும். அறுவடை செய்ய காலதாமதம் செய்தாலும் , வயலில் சாய்ந்துள்ள நெற்கதிர்கள் முளைக்கும் அபாயம் உள்ளது'' என்றனர்.

## 12 ஆண்டுகளுக்குப் பிறகு நிரம்பும் சின்னாறு அணை , நிரம்பி வழிகிறது தளி பெரிய ஏரி: விவசாயிகள் மகிழ்ச்சி



கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் 13 ஆண்டுகளுக்குப் பின்னர் நிரம்பி வழியும் பெரிய ஏரி. அடுத்த படம்: வறண்டு கிடந்த சின்னாறு அணைக்கு மழையால் நீர்வரத்து அதிகரித்து, 29.50 அடியாக நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

சூளகிரி அருகே உள்ள சின்னாறு அணைக்கு , 12 ஆண்டுகளுக்கு பிறகு நீர்வரத்து அதிகரித்துள்ளது. 2005-ம் ஆண்டுக்குப் பின்னர் தளி பெரிய ஏரி நிரம்பி வழிவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி பகுதி மக்களின் விவசாயத்திற்குத் தேவையான நீர் ஆதாரத்தை பெருக்கும் வகையில் 1985-ம் ஆண்டு ரூ. 95 லட்சம் மதிப்பீட்டில் சின்னாறு அணை கட்டப்பட்டது. சின்னாறு , பேரிகை ஏரி , பன்னப்பள்ளி ஏரி , அத்திமுகம் ஏரி உள்ளிட்ட நீர்நிலைகளில் இருந்து வரும் தண்ணீர் சின்னாறு அணையில் சேமித்து வைக்கப்பட்டு விவசாயத்திற்கு திறந்துவிடப்படுவது வழக்கம்.

அணையின் மொத்த உயரமான 37 அடியில் 33 அடிக்கு தண்ணீர் வந்தால் , அணையின் இடதுபுறம் உள்ள மாரண்டபள்ளி , கிருஷ்ணகவுன்பள்ளி, தாசம்பட்டி, இண்டிகானூர் கிராமங்களும் , வலதுபுறம் வேம்பள்ளி , கூரக்கனப்பள்ளி, கொள்ளப்பள்ளி, சென்னப்பள்ளி, சுண்டகிரி, அலகுபாவி, எலசமாக்கனப்பள்ளி, சின்னசென்னப்பள்ளி, பந்தர்குட்டை, கரகண்டபள்ளிஉள்ளிட்ட கிராமங்களுக்கும் தண்ணீர் திறக்கப்படும். இதன் மூலம் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெற்று வந்தன.

நீர்வழித்தட ஆக்கிரமிப்பு , போதிய மழையின்மையால் 12 ஆண்டுகளுக்கும் மேலாக சின்னாறு அணை வறண்டு கிடந்தது. இந்நிலையில் கடந்த 15 நாட்களாக சூளகிரி சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையால் சின்னாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. நேற்று பிற்பகல் நிலவரப்படி சின்னாறு அணையில் 29.50 அடிக்கு தண்ணீர் உள்ளது.



இது குறித்து அப்பகுதி விவசாயிகள் கூறுகையில் , ‘‘கெலவரப்பள்ளி அணையில் இருந்து துரை ஏரி வழியாக சின்னாறு அணைக்கு தண்ணீர் விட வேண்டும் என்கிற கோரிக்கை நீண்ட காலமாக கிடப்பில் உள்ளது. தற்போது பெய்த மழையால் அணை நிரம்பி வருவதால் , இப்பகுதியில் விவசாயம் புத்துயிர் பெற்றுள்ளது. இருப்பினும் ,

துரை ஏரியிலிருந்து கால்வாய் நீட்டிப்பு செய்து, சின்னாறு அணைக்கு கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என்றனர்.

**தளி பெரிய ஏரி**

கிருஷ்ணகிரி மாவட்டம் தளி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த ஒரு மாத காலமாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் இங்குள்ள ஏரிகளில் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வந்தது. நேற்று முன்தினம் இரவு தளி பகுதியில் 40 மி.மீ. மழை பதிவானது. இதனால் தளி ஒன்றியத்தில் உள்ள 10-க்கும் மேற்பட்ட ஏரிகளில் 100 சதவீதம் அளவுக்கு தண்ணீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதில் குறிப்பாக 120 ஏக்கர் பரப்பளவுள்ள தளி பெரிய ஏரி முழுவதுமாக நிரம்பி வழிகிறது.

கடந்த 2005-ம் ஆண்டுக்கு பிறகு தளி பெரிய ஏரியில் தற்போது தான் 100 சதவீதம் அளவில் நீர் மட்டம் உயர்ந்து உபரி நீர் வெளியேறி வருகிறது. இதனால் தளி ஒன்றியத்தில் உள்ள கிராம மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தினத் தந்தி

## மேலடுக்கு சுழற்சி இருப்பதால் தமிழகத்தில் இன்று அநேக இடங்களில் மழை பெய்யும் வானிலை அதிகாரிகள் தகவல்



தமிழகத்தில் தென் மாவட்டங்கள் மீது மேலடுக்கு சுழற்சி உள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (திங்கட்கிழமை) அநேக இடங்களில் மழை பெய்யும்.

சென்னை,

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை காரணமாக பல மாவட்டங்களில் மழை பெய்துவருகிறது. சென்னை வானிலை மைய அதிகாரிகள் கூறியதாவது:–

தமிழகத்தில் தென் மாவட்டங்கள் மீது மேலடுக்கு சுழற்சி உள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (திங்கட்கிழமை) அநேக இடங்களில் மழை பெய்யும். ஓரிரு இடங்களில் கன மழை பெய்யும். சென்னையில் இரவு நேரத்தில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். தொடர்ந்து 14–ந் தேதிவரை சில இடங்களில் மிதமான மழை பெய்யும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

நேற்று காலை 8–30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:–

ஆலங்காயம் 7 செ.மீ., வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் , பாம்பன், ஊத்தங்கரை, தளி, வேலூர் தலா 4 செ.மீ., ஆம்பூர், ஓசூர், பாளையங்கோட்டை, குடியாத்தம், ராதாபுரம், கிருஷ்ணகிரி தலா 3 செ.மீ., ஜெயங்கொண்டம், மேலலாத்தூர், காட்டுமன்னார்கோவில், பழனி, பூதப்பாண்டி, சூளகிரி, ஸ்ரீவைகுண்டம், ராமேசுவரம், பெரியநாயக்கன்பாளையம், பண்ருட்டி, போச்சம்பள்ளி தலா 2 செ.மீ. மழை பெய்துள்ளது. மேலும் 30–க்கும் மேற்பட்ட இடங்களில் 1 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

# தொடர் மழையால் 12 ஆண்டுக்கு பிறகு நிரம்பி வழியும் தளி பெரிய ஏரி



தேன்கனிக்கோட்டை பலத்த மழையால் :, தளி பெரிய ஏரி 12 ஆண்டுக்கு பின்னர் முழுகொள்ளளவை எட்டியது இதனால் .விவசாயிகள் பூஜை செய்து சிறப்பு வழிபாடு நடத்தி வருகின்றனர் . தேன்கனிக்கோட்டை, தளி சுற்றுவட்டார பகுதியில் கடந்த 2 வாரமாக பரவலாக மழை பெய்து வருகிறது குறிப்பாக தளி பகுதியில் பலத்த மழை . பெய்து வருவதால், 30க்கும் மேற்பட்ட ஏரிகள் நிரம்பியுள்ளன . இதனிடையே தளி பகுதியை சுற்றியுள்ள கர்நாடக காட்டு பகுதியிலும் தொடர்ந்து கன மழை பெய்து வருகிறது இதனால் தேவர்பெட்டா ., சூடசந்திரம் ஆகிய பகுதியில் உள்ள ஏரிகள் நிரம்பி, உபரி நீர் தளி ஏரிக்கு வந்ததால் தற்போது முழு கொள்ளவை எட்டியுள்ளது . இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு தளி பகுதியில் பெய்த கன மழையால் , ஏரியின் வலது புற கால்வாய் வழியாக தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது . இதையறிந்த தளி பகுதி மக்கள், கூட்டம் கூட்டமாக வந்து ஏரியை பார்த்து ரசித்து வருகின்றனர் மேலும் . ஏரிப்பகுதியில் பூ, பழம் வைத்து கங்கை பூஜை செய்து வழிபாடு நடத்தி வருகின்றனர் . இது குறித்து விவசாயிகள் கூறுகையில், கடந்த 2005ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு நாள் இரவு முழுவதும் பெய்த பலத்த மழைக்கு , தளி பெரிய ஏரி உடைந்தது . ஆனால் . அதன்பின்னர் ஏரி சீர் செய்யப்பட்டது12 ஆண்டாக போதிய

மழையின்மையால், 200 ஏக்கர் பரப்பளவு உள்ள ஏரி சிறிய குட்டைபோல் மாறி வறண்டுபோனது.

இந்நிலையில் தளி பகுதியில் கடந்த ஒரு மாதமாக நல்ல மழை பெய்து வருவதால் , மலை பகுதியில் உள்ள ஏரிகள் நிரம்பியது அங்கிருந்து வெளியேறிய தண்ணீர் ., நேற்றுமுன்தினம் இரவு தளி பெரிய ஏரிக்கு வந்தது இதன்மூலம் .12 ஆண்டுக்கு பிறகு வறண்டு கிடந்த தளி பெரிய ஏரி நிரம்பியுள்ளது இந்த ஏரி மூலம் ஆயிரக்கணக்கான . நெற்பயிர் சாகுபடி செய்து விவசாயிகள் நல்ல . ஏக்கர் பாசன வசதி பெற்று வந்தது ஆனால் கடந்த . பயனடைந்து வந்தனர்12 ஆண்டாக மழை பொய்த்து போனதால் , விவசாயிகள் நெல் சாகுபடியை கைவிட்டனர் இந்நிலையில் பலத்த மழைக் .கு ஏரி நிரம்பியுள்ளதால், நெல் சாகுபடி செய்ய ஆயத்தமாகி வருகிறோம் , அத்துடன் கோடை காலங்களிலும் விவசாயம் செய்ய முடியும்.என்றனர் .

## மேட்டூர் அணை நீர்மட்டம் 11 மாதங்களுக்கு பிறகு 75 அடியாக உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி




மேட்டூர் மேட்டூர் அணையின் நீர்மட்டம் :11 மாதங்களுக்கு பிறகு 75 அடியை தாண்டியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் கடந்த சில தினங்களாக . உயர்ந்து கொண்டே வந்த மேட்டூர் அணையின் நீர் மட்டம் கணிசமாக குறைந்து இதனால் விவசாயிகளும் .கொண்டே வந்தது, பொதுமக்களும் கவலை அடைந்தனர் . இந்நிலையில் கர்நாடகா மற்ற ும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக மேட்டூர் அணை நீர்வரதத்து வினாடிக்கு 11,880 கனஅடியில்

இருந்து கன அடியாக அதிகரித்துள்ளது . இதனால் ஒரே நாளில் 1.82 அடி உயர்ந்து , அணையின் நீர்மட்டம் 75.260 அடியை எட்டி உள்ளது பிளிகுண்டு பகுதியில் .25 ஆயிரம் கன அடிக்கு அதிகமாக நீர்வரத்து உள்ளதால் மேட்டூர் அணைக்கான நீர்வரத்து மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது அணையின் நீர்மட்டம் . தற்போது75.260 அடியாக உள்ளது அணையில் .37.395 டி . சி நீர் உள்ளது.எம்.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாட ிக்கு 700 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

## கொல்லிமலையில் பெய்த மழையால் புளியஞ்சோலை ஐயாற்றில் நீர்வரத்து அதிகரிப்பு



துறையூர் கொல்லிமலையில் பெய்தமழையால் துறையூர் அடுத்த புளியஞ்சோலை : ஆற்றில் ஐயாற்றில் நீர்வரத்து அதிகரித்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் .

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் நேற்றுமுன்தினம் பெய்தமழையால் அதனால் . சுற்றுலாதலமான புளியஞ்சோலை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது ஆலத்துடையான்பட்டி பெரியஏரிநிரம்பி ஆலத்துடையான்பட்டி சின்னஏரிக்கு வைரிசெட்டிப . நீர்வரத்து ஏற்பட்டுள்ளது ாளையம் ஜம்பேரிக்கு ஐயாற்றில் இருந்து அய்யன் வாய்க்கால் வழியாக வரும் நீர்வரத்து வாய்க்காலில் தடைஏற்பட்டதால் வைரிசெட்டிபாளையம், வலையப்பட்டி கிராமமக்கள் சென்று தடைகளை அகற்றி ஜம்பேரிக்கு நீர்வரத்தை ஏற்படுத்தினர் . ஐயாற்றிலும் நீர்வரத்து அதிகரித்துள்ளது .4 ஆண்டுகளுக்குபிறகு ஜம்பேரிக்கு நீர்வரத்து ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் விவசாயப் பணிகள் துவ க்கப்பட்டு நாற்றுவிடும் பணிகள் . பச்சமலையில் இருந்து வரும் தளுகையாற்றில் உள்ள . நடைபெற்று வருகிறது

புதர்களை அகற்ற வேண்டும், நீர்வரத்துவாய்கால்களை தூர்வாரநடவடிக்கை எடுக்கவேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர் நீர்வரத்து .

அதிகரித்துள்ளதால் புளியஞ்சோலைக்கு வரும் சுற்றுலாபயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது கொல்லிமலையில் பெய்த மழையால் ஆகாயகங்கை அருவியில் . . நீர்பெருக்கு ஏற்பட்டது இதனால் ஆகாயகங்கை அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க மாவட்ட நிர்வாகம் தடைவிதித்துள்ளது.